**சிலாபம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் சிலாபம் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்களிற்காக பேணப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் பிரகார மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகளிற்கிடையிலான இணக்காமை கூட்டுத் தொகை ரூபா 12,465,790 ஆனது. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகள் மற்றும் அட்டவனைகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 திகதிற்கு சபைக்கு பெற வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 234,296,037 ஆனதுடன் அவற்றில் 03 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய மீதிகள் ரூபா 31,127,744 ஆனது. | மேலும் பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது வீதவரி, ஏக்கர் வரி, கடையறை வாடகை மற்றும் நீதிமன்ற தண்டப்பண நிலுவையின் ஒரு பகுதியும் அறவிடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஏனைய பெற வேண்டிய கணக்குகளை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2019 திசெம்பர் 31 திகதிற்கு சபைக்கு செலுத்த வேண்டிய 05 | கடன் கொடுனர் மீதிகளை | எதிர் காலத்தில் அனைத்து கடன்கொடுனர்களையும் தீர்க்க |

| | | |
|---|---|---|
| கணக்கு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 68,389,927 ஆனதுடன், அவற்றில் 03 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 4,728,236 ஆனது. | துரிதமாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

(இ) **கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததால் கூட்டுத் தொகை ரூபா 168,287,764 ஆன 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | 2020 ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு கணிப்பீட்டறிக்கையை முன்வைப்பதாகவும் நூலக புத்தகங்களுக்காக அட்டவனை தயாரித்து 2020 நிதிக்கூற்றுடன் சமர்ப்பிப்பதாகவும் தயவாய் அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) <u>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம்</u> | | | |
| 129(2)(ஊ) ஆம் பிரிவு. | சபைக்கு பெற வேண்டிய ரூபா 987,847 ஆன வாடகையை முறையாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் அறவிட வேண்டிய வாடகை தொகையை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | கடையறை வாடகை நிலுவையிலிருந்து ஒரு பகுதி தற்போது அறவிட்டுள்ளதுடன் அறவிட வேண்டிய எஞ்சிய நிலுவை தொகை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | <u>1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி</u> | | | |
| (i) | 217 மற்றும் 218 விதிகள் | சபைக்கு சொந்தமான ரூபா 167,363,747 ஆன அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று நாளாதுவரையாக பேணப்பட்டிருக்காததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட்டுவருடாந்த கணிப்பீடும் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரரிக்கும் போது காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு பதிவேடொன்று நாளாதுவரையாக பேணப்பட நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன் |
| (இ) | <u>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை</u> | | | |
| (i) | 396(ஈ) பிரிவு | வழங்கி 06 மாதங்களை விஞ்சிய ரூபா 43,558 ஆன 09 காசோளைகள் தொர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 06 மாதங்களை விஞசிய காசோளைகள் தொர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 571 பிரிவு | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 5.278,623 ஆன 268 வைப்புகள் தொடர்பாக நடவக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 வருடங்களை விஞ்சிய வைப்புகளுக்காக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

------------------------

**நிதி விளைவுகள்**

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 80,787.587 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 47,388,780 ஆனது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் கட்டிட அபிவிருத்தி நிதியம் மற்றும் நீரும் சுகாதார நிதியம் எனும் 02 சேமிப்பு கணக்குகள் மக்கள் வங்கியின் நடாத்திச்செல்வதுடன் அவற்றின் பணம் கூடுதலான நலன்கள் கிடைக்கும் முறையில் முதலீட்'டு கணக்கொன்றுக்கு மாற்றப்படாததனால் அக் கணக்குகளில் நிருத்தப்பட்டிரந்த மீதி 2019 திசெம்பர் 31 திகதிற்கு ரூபா 1,137,285 அனது. | சேமிப்பு கணக்ககளிள் மீதிகளை கூடுதலான நலன்கள் கிடைக்கும் முறையில் மதலிடு செய்யப்பட வெண்டும். | கட்டிட அபிவித்தி நிதியம் மற்றும் நீரும் சுகாதார நிதியத்தின் கீழ் உள்ள இரண்டு வைப்பு கணக்குகளில் காணப்படும் பணத்தை இரண்டு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 4,582 | 4,730 | 4,490 | 2,646 | 4,642 | 4,723 | 4,538 | 2,414 |
| ii | வாடகை | 7,128 | 7,279 | 7,039 | 1,006 | 5,982 | 6,681 | 6,760 | 567 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,080 | 1,292 | 1,292 | - | 765 | 1,222 | 1,222 | - |
| iv | ஏனைய வருமானம | 207,946 | 194,717 | 131,188 | 227,502 | 142,072 | 126,163 | 122,581 | 136,515 |
| | கூட்டுத் தொகை | 220,736 | 208,018 | 144,009 | 231,154 | 153,461 | 138,789 | 135,101 | 139,496 |

- சேகரித்த வருமானத்தினுள் பில்லிடப்பட்ட வருமானத்தினால் சேகரித்த வருமானம் மற்றம் நிலுவை வருமானத்தினால் சேகரித்த வருமானமும் உள்ளடங்கியுள்ளன.

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மொத்த பில் போடப்பட்ட வருமானம் ரூபா 208,017,284 மற்றும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய நிலுவை வருமானம் ரூபா 139,494,868 ஆனதுடன், அவற்றின் ரூபா 144.008,540 ஆன அளவு ஆண்டினுள் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 41 சதவீத அளவானது. | ஆண்டினுள் பில்போடப்பட்ட வருமானங்களை ஆண்டினுள்ளயே அறவிட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**2.3.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் பில்லிடப்பட்ட வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 4.729,584 இலிருந்து ஆண்டினுள் ரூபா 3,333,906 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்த போதும், அது பில்போடப்பட்ட வருமானத்தின் 70 சதவீதம் ஆகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த ரூபா 2,413,598 ஆன வீதவரி மற்றும் வரி பெறுமதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 1,156,163 மாத்திரம் சேகரிக்கப்ட்டிருந்ததுடன், அது வருடம் ஆரம்ப நிலுவை பெறுமதியின் 48 சதவீத அளவானது. | ஆண்டிற்குரிய பில்லிடப்பட்ட வீதவரி மற்றும் வரி ஆண்டினுள்ளே அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டில் பில்லிடப்பட்ட வீதவரி மற்றும் நிலுவை வீதவரியிலிருந்து 2020 ஆண்டினுள் ரூபா 511,275 பணமாக சேகரிக்கப்பட்டிருந்தது. |

**2.3.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்படும் அறவிடல் தடைப்பட்டிருந்த ரூபா 416,398 ஆன குத்தகை பணம் மற்றும் 2014 ஆண்டு முதல் நிலுவையாக | முறையாக உடன்படிக்கைகள் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவிடல் | குத்தகை வாடகையின் ரூபா 416,397 ஆன தொகையை அறவிட முடியாத நிலையில் உள்ளதுடன், 2014 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 181,347 ஆன |

| | | |
|---|---|---|
| நிலவும் ரூபா 181,347 ஆன ஓய்வூதிய மண்டப வாடகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தடைப்பட்ட வாடகையை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | பணத்திற்காக வழக்கு தாக்கல் செய்ய பலமுறை முயற்சித்த போதும் முறையான உடன்படிக்கை இல்லாததனால் அது தோல்வியடைந்துள்ளது. |

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற்ற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 34,389,059 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 184,979,717 ஆனது. | மேலும் அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு குறித்த பணம் கூடிய விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையினால் உப விதிகளை விதித்து உரிய சேவைகளை மக்களுக்காக நிறைவேற்ற வேண்டிய போதிலும் சபைக்கு சொந்தமான பாதைகள், வழிகள் மற்றும் காணிகள் மற்றும் ஆதனங்கள் ஆகியவற்றின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு தொடர்பில் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த உப விதிகள் விதிக்கப்பட்டு மக்கள் நலனுக்காக சேவைகளை வழங்க வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகள் விதிக்கப்பட்டு குறித்த சேவைகளை மக்களுக்காக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவு முகாமை தொடர்பாக மீளாய்வாண்டில் செயற்படுத்த திட்டமிட்டிருந்த ரூபா 8,215,000 ஆன கருத்திட்டம் மற்றும் 07 வேலை திட்டங்கள் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களை ஆண்டினுள்ளே நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வெண்டும். | 2019 ஆண்டு பாதீட்டிற்கு திட்டமிட்ட போதும் அவ்வேலை திட்டங்களை செயற்படுத்த அதன் போது நாட்டில் நிலவிய பாதுகாப்பற்ற சூழல் பிரகாரம் அவ் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள இயலாதிருந்ததாக அறிவிக்கிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் அமைப்பின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பாக அறிந்திருந்ததுடன், மிளாய்வாண்டில் நோய் தடுப்பு, வறுமை ஒழிப்பு, கழிவு பொருள் முகாமை மற்றும் கரையோர பாதுகாப்பின் கீழ் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு வேலை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது வழங்குனர்களை பதிவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 27,000 பெறுமதியான 39 காசுக் கட்டளைகள் மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் | மாற்றப்படாத காசுக் கட்டளைகள் தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த காசுக் கட்டளைகளை பெற்றிருந்த போதும் அவைகள் வங்கி கணக்கிற்கு செலவு வைத்திருக்காததால் அது தொடர்பாக கண்டறிந்து அதை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்த ரூபா 2,500 பெறுமதியான காசுக் கட்டளைகள் 2020 மே 13 திகதி வரையிலும் மாற்றப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அறிவிக்கிறேன். |
| (ஆ) | சிலாபம் இனிகொடவல பாடசாலை காணியை ஒப்படைக்க சிலாபம் பிரதேச செயலாளருக்கு 2000 ஆம் ஆண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 25,000 ஆன முற்பணத் தொகையை 2020 மே 13 ஆந் திகதி வரையிலும் தீர்த்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிலாபம் இனிகொடவல பாடசாலை காணி ஒப்படைப்பு தொடர்பாக சிலாபம் பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்த முற்பணத் தொகையை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத் தொகையை பதிவேடுகளிலிருந்த பதிவழிப்பதற்காக மகா சபை அங்கிகாரம் ஒன்றை பெற்று ஆளுனரிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கிறேன். |
| (இ) | 2004-2016 காலப் பகுதியினுள் சபை அதிகார பிரதேசத்தில் பரிக்கப்பட்டு விற்பனை செய்த காணிகளிலிருந்து பொதுப் பணிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 08 காணித்து துண்டுகளின் உறுதிகள் சபைக்கு கையேற்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் இக் காணித்துண்டுகள் எல்லை இடப்பட்டு பாதுகாக்கும் வேலைத் திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை | சபைக்கு சொந்தமான காணி துண்டுகளை இனங்கண்டு உரித்துறுதிகளுடாக சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்வாறு 2004-2016 ஆண்டு காலப்பகுதியினுள் சபைக்கு கிடைத்த பொது காணிகளின் உரித்துறுதிகளை பெற்றுக் கொள்ள தற்போது அந் நிறுவனங்களிற்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2005 ஆம் ஆண்டின் போது துண்டுகளாக்கப்பட்டு விற்கப்பட்டிருந்த கருன்குவடவன கஜுகெலேவத்த எனும் காணியில் பொதுப் பணிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த எனினும் உரித்துறுதிகளால் கையளிக்கப்படாத பர்சஸ் 115 காணித் துண்டிலிருந்து 60 பர்சஸ் அளவான ஆதனம் | பொதுப் பணிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த காணித் துண்டுகளை சுவீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் ஏலவிற்பனை காணியின் பொதுக் காணிகளின் உரித்துறுதியை பெற்றுக் கொள்ள தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இக் காணியின் பெறுமதிக்கு சமனான பெறுமதியை பணத்தினால் பெற்றுத்தர தற்போது காணி உரிமையாளர்கள் விருப்பம் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தினால் போலியான ஆவணங்களை தயாரித்து 2018 ஆண்டில் வேறு நபரொருவருக்கு விற்கப்பட்டிருந்தது. | | தெறிவித்துள்ளனர். இது தொடர்பாக முன் நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |
| (உ) | சபையில் பதியப்பட்டுள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் 282 முச்சக்கரவண்டிகளில் இருந்து 2018 ஆண்டிற்காக ரூபா 155,100 மற்றும் 2019 ஆண்டிற்காக 295 முச்சக்கரவண்டிகளில் இருந்து ரூபா 162,250 என ரூபா 317,350 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து முச்சக்கரவண்டி தரிப்பிடங்கள் பற்றியும் முறையான கணிப்பீடொன்றை மேற்கொண்டு நிருத்தப்படும் முச்சக்கரவண்டிகள் பற்றிய தகவல்கள் நாளாதுவரையாக்கி கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தல் அனைத்து முச்சக்கரவண்டி தரிப்பிடங்களின் அங்கத்தவர்கள் தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு நிலையாக உள்ள அங்கத்தவர்களை இனங்கண்டு பணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் எம்மால் வருடாந்தம் பணம் அறவிடப்படுவது அனுமதிப்பத்திர கட்டணமாகவே தவிர நிலுவை கட்டணம் அறவிடும் முறைமை ஒன்று இல்லை எனவும் குறிப்பிடுகிறேன். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 - 2011 வரையான காலப்பகுதினுள் சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியதால் அறவிட வேண்டிய ரூபா 416,398 ஆன வரித் தொகையொன்றை குறித்த காலப்பகுதியினுள் அறவிட உரிய முயற்ச்சி எடுக்காததால் தற்போது அறவிட முடியாமலிருந்த காரணத்தால் சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | நிலுவை வரி தொகையை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2002-2016 காலப் பகுதிகளிலிருந்து வரியினுள் காணப்படும் ரூபா 416,398 தொகை கடந்த காலத்தில் அறவிடப்படாமை மற்றும் உடன்படிக்கை இல்லாமையினால் அறவிட முடியாததுடன் அவற்றை பதிவழிக்க உள்ளூராட்சி ஆணையாளரினால் ஆளுனருக்க முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டது. அவற்றை கூடிய விரைவில் மதிப்பிற்குரிய ஆளுனரின் அங்கிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கிறேன். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இரண்டாம் மற்றும் முதலாம் தரங்களுக்குரிய 29 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன்,தொழில்நுட்ப உத்தியோகத்தர், பணி உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர் போன்ற சபையின் பிரதான செயற்பாடுகளிற்குரிய பதவிகளும் அவற்றுள் உள்ளடங்கும். மேலும் முதலாம் தரத்திற்குரிய 01 பதவியில் 04 ஆளணி மிகையும் காணப்பட்டுதுடன் மிகை பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிட பதவிகளுக்காக முறையாக ஆட்சேர்ப்பதற்கும் மிகை பதவியை அங்கீகரித்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிட பதவிகளை நிரப்புதல் மற்றும் மேலதிக பதவிகளை அங்கீகாரித்துக் கொள்ள உரிய அங்கீகாரங்களிற்காக முன்வைக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்படாத ஊழியர்கடன் மீதி ரூபா 783,792 ஆனது. பெரும்பாலான கடன் மீதிகள் தொடர்பான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லாததுடன் நிலுவைக் கடன் மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வொன்றினை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது ஊழியர் கடன் பதிவேட்டினை சமப்படுத்தி தீர்த்து ஊழியர் கடன் மீதி தொடர்பாக காலப் பகுப்பாய்வொன்றினை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கிறேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைததுவம்

#### 3.5.1 விளைவற்ற சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 1,683,750 ஆன 03 டெக்டர்கள் 02 வருடத்திற்கு விஞ்சிய காலமாக செலுத்தப்படாது விளைவற்று காணப்பட்டன. | உச்ச நலனை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பவுசர் மூலம் நீரை பகிர்ந்தளிக்க மற்றும் அதிகார எல்லையில் குப்பைகளை ஒன்று சேர்க்க இக் டெக்கடர் வண்டி பயன்படுத்தப்படவுள்ளது. |

### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான அலுவலக கட்டிடம், நூல் நிலையம் மற்றும் முன்பள்ளி அமைந்துள்ள காணி உள்ளடங்களாக சபையினால் பயன்படுத்தப்படும் 22 காணிகளை சபையிற்கு சுவீகரித்துக் கொண்டு இருக்கவில்லை. | சபை பயன்படுத்தும் காணிகளை முறையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் பிரதேச சபைக்கு சொந்தமான அலுவலக கட்டிடம், நூல் நிலையம் மற்றும் முன்பள்ளி அமைந்துள்ள காணி உள்ளடங்களாக சபையினால் பயன்படுத்தப்படும் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரி எல்லையினுள் நலன்புரிசேகைள், சுகாதார சேவைகள, நூலக சேவைகள் மற்றும் பாலர் பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான 49 செலவின விடயங்களுக்காக ஏற்படுத்தியிருந்த ரூபா 19,410,500 ஆன ஒதுக்கீடு குறித்த வேலைகளுக்கு செலவிடப்படாது மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்தது. | வரவு செலவு மதிப்பீட்டை சாத்தியமானதாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீட்டினால் உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்கையில் நாட்டில் காணப்படும் எதிர்பார்க்க முடியாத சந்தர்பமொன்று ஏற்பட்டதனால் அவ் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த ஆண்டுகளை போன்றே நிர்மாணப் பணிகள், சொத்துக்கள் முகாமைத்துவம், மக்களுக்கு சேவைகள் வழங்குதல் என்னும் துறைகளை பரிசோதிக்க திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | சபையின் அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்து கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டில் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு எதிர்காலத்தில், சொத்துக்கள் முகாமைத்துவம், மக்களுக்கு சேவைகள் வழங்குதலிற்காக களப் பரிசோதனைகளிற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

மீளாய்வாண்டினுள் பிரதான அலுவலகம், உப அலுவலகம், நூலகம், பாலர் பாடசாலை உள்ளிட்ட 20 பல்வேறு துறைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள திட்டமிடப்பபட்டிருந்த போதும் 2019 ஜுன் 04 வரை 05 இடங்களில் மாத்திரம் கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.